சென்னை 8-11-2012 தினத்தந்தி

### 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால் தலைகளுடன்

# பெரம்பூர் ஐ.சி.எப்.பில் தபால்தலை கண்காட்சி

## மாணவ-மாணவிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்

சென்னை, நவ.8-

சென்னை பெரம்பூரில் உள்ள ரெயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலையில் (ஐ.சி.எப்.) உள்ள அருங்காட்சியகத்தில் தபால்தலை கண்காட்சி நேற்று தொடங்கியது. இதனை மாணவ-மாணவிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

### தபால் தலை கண்காட்சி

பெரம்பூர் ஐ.சி.எப்.பில் உள்ள மண்டல ரெயில் அருங்காட்சியகத்தில் தபால் தலை கண்காட்சி தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இதில், ஐ.சி.எப். பொதுமேலாளர் அபய் கே.கண்ணா கலந்து கொண்டு தபால்தலை கண்காட்சியைத் தொடங்கி வைத்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

ரெயில்வே துறை, மிருகங்கள், வரலாறு தொடர்பான 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால்தலைகள் இடம்பெற்றுள்ளன. தபால்தலைகள் சேகரிக்கும் போது நாட்டின் வரலாறு, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் போன்ற பல அரிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும். இது குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த கண்காட்சி நடத்த உதவி தபால்துறைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### 16-ந் தேதி வரை நடைபெறுகிறது

இந்த விழாவில், சென்னை மண்டல தபால் சேவைகள் துறை இயக்குனர் சுமிதா அயோத்யா முன்னிலை வகித்

யின் தலைமை பாரம்பரிய அதிகாரி எஸ்.ஸ்ரீனிவாசன் வர வேற்றார். நிறைவில் ஐ.சி.எப். மண்டல ரெயில் அருங்காட் சியகத்தின் காப்பாட்சியர் வி.கல்யாணசுந்தரம் நன்றி கூறினார்.

2012-ம் ஆண்டு குழந்தைகள் தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்த கண் காட்சி நடத்தப்படுகிறது. இது மட்டுமல்லாமல், குழந்தை களுக்கான பல்வேறு போட்டி களும் நடத்தப்படுகின்றன. வரும் 16-ந் தேதி வரை தபால் தலை கண்காட்சி நடைபெறு கிறது. அன்றைய தினம் ஐ. சி.எப். விளையாட்டு மைதா னத்தில் இருந்து ரெயில் அருங்காட்சியகம் வரை பேரணி நடைபெறுகிறது. மேற்கண்ட தகவலை ஐ.சி.எப். மக்கள் தொடர்பு அதிகாரி ஜி.சுப்பிரமணியன் தெரிவி த்தனர்.

# நூற்றாண்டுகளின் வளர்ச்சியை பேசும் தபால் தலைகள்

## ரயில்வே அருங்காட்சியகத்தில் சிறப்பு கண்காட்சி

சென்னை, நவ. 8-
குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, தபால் தலைகள் சேகரிப்பு சிறப்பு கண்காட்சி, பெரம்பூர் ரயில் இணைப்பு பெட்டி தொழிற்சாலையில் உள்ள அருங்காட்சியகத்தில் நடைபெற்றது.

**30 தலைப்புகளில்...**

இந்த கண்காட்சியில், ரயில் நிலையம், ரத்த தானம், சாரணிய இயக்கம், உயிர் சூழ்நிலை இயல் போன்ற, 30 தலைப்புகளின் அடிப்படையில், பல்வேறு நாடுகள் வெளியிட்டுள்ள, தபால் தலைகள் மற்றும் உறைகளை, தபால் தலை சேகரிப்பாளர்கள், காட்சிப்படுத்தி இருந்தனர்.

வரலாற்று நினைவு சின்னங்களை சேகரித்து, பாதுகாக்கும் திறனை வருங்கால தலைமுறையினரிடம் வளர்க்கும் வகையில்,



சென்னை ஐ.சி.எப்., ரயில் அருங்காட்சியகத்தில், தபால் தலை கண்காட்சி நேற்று துவங்கியது. இதில் உள்ள தபால் தலைகளை, ஆர்வமுடன் பள்ளி மாணவியர் பார்வையிட்டனர்.

குழந்தைகள் தின சிறப்பு நிகழ்ச்சியாக, இந்த கண்காட்சி நடப்பதாக, ரயில் இணைப்பு பெட்டி தொழிற்சாலையின் பொது மேலாளர் கண்ணன் கூறினார்.

கண்காட்சியினை துவக்கி வைத்து அவர் பேசியதாவது:

எந்த துறையானாலும், அதன் வரலாற்று பதிவுகளையும், பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட புரட்சிகளையும் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில், ரயில்வே சம்பந்தமான அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளை, வரும் தலைமுறையினர் தெரிந்து கொள்ள, நவீன அருங்காட்சியகம், பெரம்பூரில் உள்ள ரயில் இணைப்பு பெட்டி தொழிற்சாலையில் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம், இளைஞர்கள் ரயில் இயக்கத்தின் அனைத்து தொழில்நுட்ப கூறுகளையும் அறிந்து கொள்ள முடியும்.

மேலும், சுற்றுலா துறையின் உதவியோடு, ரயில்வே அருங்காட்சியகத்தை பொதுமக்கள் கண்டு பயன்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

**16ம் தேதி வரை**

வரும் 16ம் தேதி வரை இந்த கண்காட்சி நடக்கிறது. மேலும், ரயில் அருங்காட்சியகத்தில் இயங்கி வரும் சிறுவர் ரயில், வாரத்தில் திங்கள் கிழமை தவிர, மற்ற நாட்களில், காலை 10.30 முதல் மாலை 5.30 மணி வரை இயக்கப்படும், இந்த ரயிலில் 10 ரூபாய் கட்டணம் செலுத்தி பயணம் செய்யலாம் என்றும் ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.